Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஇ (1889) ஆவணி [28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எடு] யாழ்ப்பாணம்:- சோபகிருது ஹூ தைமீ சஉ வெள்ளிக்கிழமை (17 January. 1964 [ஆல-சஉ

# சித்தர்கள் கண்ட சைவசித்தாந்தம்

[சித்தாந்த அறிஞர் திரு. வே. சோமசுந்தரம் அவர்கள்]

"கல்லானிழன் மலை
வில்லாருளய
பொல்லாரிணைமலர்
நல்லார் புனைவரே".

உலகு, உயிர், கடவுள் என்னும் மூன்றும் தொன்மையே உள்ளன. உலகு காரிய அவத்தையிற் தோன்றி, காரண அவத்தையில் மறைந்து மாறுதலடையும் உள்பொருள். உயிர் அறியாமையோடு கூடிய அறிவாகிய உள்பொருள். கடவுள் அறியாமையில்லாத முற்றறிவு உள்ள உள்பொருள், இம் மூன்றினிலே கடவுள் மலம் இல்லாத முற்றறிவு உடையதாகலின் எங்கும்பூரணமாய்க் கலந்தும் கடந்தும நிற்கும். அப் பூரணத்தின் உள்ளே பசு, பாசங்கள் அடங்கி நிற்கும். இது தனித்து நிற்பது இல்லை,

பண்டைய மக்கள் முதலில் உலகுண்மையையும், பின் உயிர் உண்மையையும் அதற்குப்பின் கடவுள் உண்மையையும் சோபானமுறையாகக் கண்டிருப்பார்கள். இம் முப்பொருளில் எங்குமுள்ள கடவுள் ஒன்ருயும, வேருயும் உடனுயும் நிற்பதை நாளடைவிற் கண்டிருப்பார்கள். இதுவே அத்துவிதம்.

நமது தாய்நாடாகிய இந்தியாவிற்ருன் முதல் முதல் தத்துவ ஆராய்ச்சி ஆராயப்பட்டது. இவ்வுண்மை ஆராய்ச்சியாளருக்கு நன்குவிளங்கும். மிக, மிகப் பழைய காலத்தில் அதாவது சரித்திர காலத்திற்கு பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னர் நம் நாட்டை நாவலந்தீவு என்று குறிப்பிட்டார்கள். அன்றைய நாவலந்தீவு மக்கள் தெய்வ திருவருளால்நல்வினை,தீவினையுணர்ச்சியோடு பிறந்த ஞானவான்களாகிய ஆன்ம சக்தியுடையவர்களைச் 'சித்தர்' என அழைப்பார்கள் அச் சித்தர்கள் கண்ட, முடிந்த முடிவே "சைவ சித்தாந்தம்" என்று அழைக்கப்படுகின்றது

சித்த மார்க்கமாகிய சைவ சித்தாந்தம் ஒரு காலத்தில் மண் தலமாகிய ஐந்து கண்டங்களிலும் பரவி யிருந்தது என்பதை பல மந்திரங்களும் ஆராய்ச்சியாளரும் உறுதிப்படுத்துகின்றனர். உதாரணமாக ஒரு மந்திரத்தைப் பாருங்கள்.

"தமிழ் மண்டலம் ஐந்துந் தாவிய ஞானம்
உமிழ்வது போல உலகத்திரிவார்
அவிழும் மனமும் எம்ஆதியறிவும்
தமிழ்மண்டலம் ஐந்துந்
தத்துவமாமே".

அந்தக்காலத்தில் அவ்வவ் விடங்களில் தமிழ்மொழியுஞ் சைவ சமயமும், சிவலிங்க வழிபாடும் பரந்து இருந்தது. நந்தியருளால் நாதனும் பெயர் பெற்ற சுந்தரநாதராகிய திருமூலநாயனுர் தனது மாணுக்கர் எழுவரைக் கொணடு தெற்கே பல இடங்களில் மடங்கள் எடுத்து சித்தாந்த நுட்பத்தைப் பரப்பினர் என்றும் சொல்லப்படுகிறது. எழுவராவர்

'மந்திரம் பெற்ற வழிமுறை
மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன்
உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்சமலைய
னேடு
இந்த எழுவரும் என்வழியாமே'.

என்னும் கயிலை முதலாய் பொதியம்வரையும் மடங்கள் கட்டி திருமூலர் இருந்து சைவசித்தாந்தத்தை விருத்தி செய்தாரென்பது கோகழி அடிகள் செய்த தத்துவரத்னுகரத்திலிருந்து அறியக்கிடக்கின்றது. அதாவது,

'கயிலையில் இமயந்தன்னில்
கங்கையில் கூவமதன்னில்
பயிலுமா மூண்டமான
மடத்துடன் பருப்பதத்தில்
இயலுகாளத்தி தன்னில் எயின்
மதிற் காஞ்சி தில்லை
முயலுதண்டுறையே தென்றற்
கிரியுடை மூற்றவுண்டாம்',
இவையிவை மூலநாதன் இருந்திடும இடத்தின் தானம்

சித்தாந்தம் இடைக்காலத்தில் தான்பிறந்தநாட்டிலேயே வடக்குப் பகுதியில் வேதாந்தமென்றும்; தெற்குப் பகுதியில் சித்தாந்தமென்றுப் பெயர் பெற்று நிலவியது. இதன் காரணமாக இவையிரண்டும் சிததாந்தம், வேதாந்தம் என வெவ்வேருகக் கருதப்பட்டு, வேறறுமையுணர்வால் ஏற்படும வாதப் போர்களுக்கும் காரணமாயின.

நமது நாட்டு மொழிகளில் தொன்மை வாய்ந்தது இரண்டு. ஒன்று தென் மொழி; இன்னென்று வட மொழி. முன்னையதிலுள்ள நூல்களில் பழமையானது தொல்காப்பியம். பின்னையதிலுள்ள நூல்களில் பழமையானது வேதம்.

வடமொழி வேதம் நாளுக்கு நாள் பெருகலாயிற்று அதன்கண் புகுந்துள்ள ஞானப்பகுதியாகிய உபநிடதம் அதாவது வேதாந்த மன்பதையையே [illegible]

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## நற் சிந்தனை

மாசற்ற நெஞ்சுடைய
மாதவர்தா மண்ணகத்தே
ஆசற்ற நற்றுறவோ ராம்.

## கதிர்காமத்தில் இசை விழா

—:—

கடவுள் வழிபாட்டினுலன்றி மக்களுக்கு விமோசனம் ஏற்படாது என்ற ஆன்ருேர் வாக்கின் உண்மையை உணர்ந்து கதிர்காமத்தில் ஓர் இசை விழா நடாத்தி முருக வழிபாடும் நடாத்தற்கு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொள்ளற்பொருட்டு வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் 19-1-64 திங்கள் பிற்பகல் 2 மணிக்கு கச்சாய், தமிழிலக்கிய மன்றம் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடாத்தவிருக்கிறது

## கடவுள் பக்தி கயமைக்கு மருந்து

யாழ்ப்பாணம் அரசினர் சிறைச்சாலையிலுள்ள சைவக் கோவிலில் 14-1-64 தைப் பொங்கல் அன்று பகல் 11 மணியளவில் விசேட பூசை ஆராதனையும், பொங்கல் விழாவும் நடைபெற்றன. சைவ பரிபாலன சபையார் ஆதரவில் பஜனையும், சைவ சமய சம்பந்தமான உபந்நியாசமும் நடைபெற்றன.

அத்தருணம் சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி ஆசிரியர் பேசியதாவது:-மனிதசக்திக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று இருக்கின்றது. அதனை யாரும் மறுக்க முடியாது. அப்பெரிய சக்தியே இறைவன். இறைவனை வழிபாடு செய்ய வேண்டியது ஆன்மாக்களின் கடமையாகும், உலக வாழ்வில் காமம், வெகுளி, மயக்கம காரணமாகச் சில குறறங்களைப்புரிந்து, தண்டனைக்கு ஆளாகி கைதிகளாய் இருந்தபோதிலும், இறைவழிபாட்டைச் சற்றேனும் மறக்கக்கூடாது குற்றம்புரிந்தவன் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு மேலும் குற்றம் புரியாது நடக்க முன்வர வேண்டும். சிறைச்சாலை மனிதனின் வாழ்வைப் பண்படுத்தும் கலைக்கூடமாகத் திகழவேண்டும். இறைவனிடத்தில் பற்று ஏற்பட்டால் தீய நினைவுகள் நம் மனதில் தோன்ருது. எனவே இறைவனிடத்துச் சிறந்த நம்பிக்கை வைக்க வேண்டும். சிறைக்கைதிகளாகிய நீங்கள் விடுதலையாகி வெளியே சென்ருல் மற்றவர்கள் உங்கள் போலக் குற்றம்புரிய முற்படாது நன்மொழிகூறி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும் தேவார திருவாசகங்களை நன்ருகப் பாடவேண்டும். இந்தப் பொங்கர்புதுநாள் முதல் உங்கள் இதயத்தைத் தூய்மைப்படுத்தி இறை வழிபாட்டில் பற்று வையுங்கள். நல்ல நினைவுகளை மனதில் படியச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார்.

தன்பம் நும்மைத் தோழாத நாள்கள் என்பாரும்
இன்பம் நும்மை ஏத்துநாள்கள் என்பாரும்
நும்பின் எம்மை நுழையப் பணியே என்பாரும்
அன்ப ஞரர் ஆதிரை நாளால் அதுவண்ணம்.

x x x

ஊனுகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானுதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
ருனுகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானுன்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

# திருவாசகத்திலே திருவண்டப்பகுதி

## அன்புக்கடலும் அருட்கடலும் சந்தித்தன

[அகில இலங்கைச் சைவ மகாநாட்டு நிகழ்ச்சி]

[தொகுத்தவர்: திரு. வை. இரகுநாதமுதலியார் M. Sc.
நீராவியடி.

முற்றொடர்—3

"அடியார் பெருமை" என்னும் பொருளில் பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் பேசுகையில், தற்கால ஆராய்ச்சியாளர்கள், புதுப் புதுக்கோணங்களில் ஆராயப் புகுந்து தேவையற்றன பகர்ந்து தேவையானவற்றை மறந்து குழப்பிவிட்டார்கள். ஆன்மாவின் உயிருக்கு உயிராக இறைவன் உள்ளான். வெளி உலக ஆட்டங்கள் அடங்கிய பின்னரே சிலம் பொலி நமக்குக்கேட்கும். நம் குழந்தைகட்குப் பிற ருசிகளைக் களைந்து சிவனிடத்தில் ருசி உண்டாக்க வேண்டும். எக்கடவுளை வணங்கினுலும் பரம்பொருளை வைத்தே வணங்க வேண்டும். சிவசின்னங்களை விரும்பி அணிய வேண்டும். சிவனடியார்களின் வாழ்க்கைகளை நமக்கு வழி காட்டியாகவைத்துக்கொள்ள வேண்டும், இக்கால மக்கள் தங்கள் தேவைகளை எச் சமயம் பூர்த்தி செய்கின்றது என்று தேடி அலைந்து திரிகின்றனர் என்றும் கூறினர்.

பின்னர் திரு. கிருஷ்ண பிளளை அவர்கள் "மாணிக்க வாசகரின் உவமைகள்"என்ற தலைப்பில் நகைச்சுவை ததும்பத். திருவாசகத்தேனைச் சுவைக்கும் வழியைக் கூறினர்கள். திருவாசகத்தின் சிறப்பு திருவண்டப்பகுதியில் உள்ளது. அதை எல்லோருமே படிக்க வேண்டும். உள்ளத்தை உருக்கத் திருவாசகத்தையே படிக்க வேண்டும். 'திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்' என்பது முதுமொழி. இறைவன் மாணிக்கவாசகரின் கல்மனத்தைக் கசிவிக்கவோ வளைக்கவோ முடியாதென ஐயுற்று கற்பாறைகளையுடைய மேரு மலையை வில்லாக வளைத்துப் பழகிய பின்னரே மணிவாசகரின் உள்ளத்தைக் கசிவித்தார்' என்பதில் உள்ள உவமை இனிது சுவைக்கத்தக்கது.

பிற்பகல் மாநாடு திரு. த. முத்துச்சாமிப்பிள்ளையின் தலைமையில் கூடியது. அப்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## நாடெலாம் நலஞ்சேர்க

★

[ ஸ்ரீ காந்திதாசன் — பர்மா ]

ஈடில்லாத் திருநாளாம் பொங்கற் பொன்னுள்
எந்நாட்டும் இன்பத்தை நல்கும் நன்னுள்
பீடுற்ற உழவர்கள் புகழும் இன்னுள்
பெருநாளுள் உலகத்தின் திருநாள் இன்னுள்
வீடுற்ற வேல்விழியாள் கோலம் இட்டு
விளக்கிட்டுப் பொன்கலத்தை அடுப்பில் வைத்து
நாடெல்லாம் நலஞ்சேர்க என்றுபாடி
நல்லமுதம் படைத்திட்டாள் கதிரோன் முன்னே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சோபகிருது ஸ்ரீ தைமீ
சஉ வெள்ளிக்கிழமை

## புதுப் பொங்கல் புன்மை போக்குமா?

பொழுது புலர்ந்தது; புதுப்பொங்கல் இயற்றினர் மக்கள் இறைவனை பொன்னடியைப் போற்றி திருவருளாற் புன்மை இருட்கணம் போவதாக. அறிவென்னும் ஒளி அவனியில் பரவுவதாக. நீதி நிலவுவதாக; நேர்மை நெறியில் மக்கள் நின்று வாழ்வதாக. இத்தகைய நன்மை உதயமாவதற்கு நமச்சிவாயவே ஞானமும் கல்வியுமென்றும், நன்னெறி காட்டுமென்றும், ஐந்தெழுத்தைக் கண்டோறும் நாநவின்றேத்தும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்போமாக. இந்தப் பூமியில் எங்களை உய்யக் கொள்கின்றவாறு எங்கும் சிவாலயங்கள் இயங்குகின்றன. அங்கெல்லாஞ் சென்று அரனை வணங்கி அவனியின் புனிதத்தைக் காப்பாற்றுஞ் சீர் செய்வோமாக. எனவே எம வாழ் முதலாகிய பொருள் எல்லாம வல்ல சிவபெருமானே என்றுணர்ந்து தைப்பிறப்பால் உய்ய வழி தேடுவோமாக.

x x x

## வள்ளலாய் வழங்கிய வைத்திய கலாநிதி

தக்கோர்குணம் கொடையால் என்ற கருத்துக்குப் பொருத்தமாய் விளங்கி நாட்டு மக்களின் நலத்திற்காகச் சேவை செய்த பெரியார் வைத்திய கலாநிதி சு. சுப்பிரமணியம் அவர்களின் மறைவு ஈழத்துக்குப் பெரு நட்டமாகும் கல்விச் செல்வமும்பொருட் பொலிவும் பொருந்தி உத்தம வைத்தியராய்த் திகழ்ந்த ஒருவர் ஊருககுபகாரியாய உற்றவருககு உதவியாளராய் ஒன்றும அற்றவருக்கு உறுதுணையாய் சமயத்துக்கும் சமூகத்துக்கும் கல்விககும் கைத்தொழிலுக்கும் ஊக்கமாய் உதவிய வள்ளல் என்று மக்களால் வாயார வாழத்தப் பெறுவது அரிது. இப்பெரும் புகழை ஈட்டிய வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள்தமிழகத்தின் தலைசிறந்த தலைவர் ஆவர். அரசியலிற் புகுந்து மககள் தெரிவை அவாவியிருப்பரேல் ஒரு பெரும் அரசியல் ஞானியாய் விளஙகியிருப்பார் எங்கள் வைத்திய கலாநிதி. ஆனல் அவர் அதை நாடவில்லை. மக்கள் அவ்வாறு அவரை அரசியலுட் புகுத்த முனைந்த

## சித்தர்கள் கண்ட

1-ம் பக்கத் தொடர்ச்சி

வேதாந்தம் கடல்போலப் பெருகிற்றுஎன்றும் கூறலாம். மக்களும் விருத்தியடைந்தனர்போலும். வல்வினைப் பயனுலே வேதவேதாந்தம் மக்களுக்குப் புரியவில்லை. அதனுல் வேதங்கள் அடி தலை மாறி நிலைகுலைந்து போயின. மக்களும் மயக்கத்தினுல் சிவனை மறந்து வேறு தெய்வங்களை வணங்குபவராயும், நாத்திகராயுமமாறவரம்புகள் இறந்தன. உலகவரும் வேத நூல் மறந்தனர் பவநெறி மல்கி நாடொறுபபெருகிறறு. இவ்விதம் மக்கள் அலைந்த காலத்து,

"முந்தொரு காலத்தின்
மூவுலகந் தன்னில்
வந்திடுமுயிர் செய்த
வல்வினை யதனுலே
யந்தமின் மறையெல்லா
மடிதலை தடுமாறிச்
சிந்திட முனிவோருந்
தேவரு மருளுற்றுர்".

விட்டுணு முதலிய தேவர்களும், முனிவர்களும் இரக்கமுடையவராய் சிறீகண்ட பரமசிவனிடத்தில் முறையிட அவர் விட்டுணுவைப் பூலோகத்திற்குச் சென்று மலைவைத்தீர்க்கும்படி அவனுக்குக் கட்டளையிட அவரது ஓர் அம்சம் வேதவ்யாசராய்த் தோன்றி இருக்கு வேதத்தைக் காலத்துக்கு ஏற்றவாறு பிரித்து நான்கு வேதமாகச் செய்தார். பின்பும் சுருதிகளிசைக்கும் பல பொருள்கள் மக்களுக்கு அளவுபடாதென்றெண்ணிப் பலவகைக் கருத்துடைய சூத்திரங்களைச் செய்தார். அவை விசாக சூத்திரம், வேதாந்த சூத்திரம் பிரமசூத்திரம் என்று வழங்கி வருகின்றன.

வேதாந்த சூத்திரத்திற்குச் சங்கரர் முதலிய ஆசிரியர் நால்வரால் பிற்காலத்தில் பாடியங்கள் தோன்றின பாடியங்கள் தோன்றுவதற்கு முதல் வேதாந்தம் ஒருமை நோக்குடன் அறிஞரால கொள்ளப்பட்டு வந்தது. பாடியங்கள் தோன்றியபின்பு வேதாந்தத்தின் ஒருமை நோக்கு நாளடைவில் அழிந்து போய், சிவாத்துவிதமென்றும், கேவாத்துவிதமென்றும், விசிட்டாத்துவிதமென்றும், துவிதமென்றும், பிறவென்றும் வேதாந்த உலகில் கவடுகோடுகள் முளைத்தன அவைகளின்மீது செடிகொடிகளும் படரத்தொடங்கின.

பாடியங்களை வரைந்த பெரியோர்மீது பழிசுமத்துவது அறியாமை. அவர்கள கருணை மேலீட்டினுல் அவ்வக் காலத்துக்கேற்றவாறு பாடியங்கள் வரைந்தார்கள், பின் வந்த மத ஆசிரியர்கள் பாடியங்களையொட்டிக் காணப்பெற்ற மதங்களும் சம்பிரதாயங்களும் பல சமயங்களையுண்டாக்கிப் பெருங் குழப்பங்களை யுண்டாக்கின முப்பொருளைப்பற்றியும், அத்துவிதத்தைப்பற்றியும் ஒரு முடிவிற்கு வராமல் சொற்போரும் மற்போரும் ஆங்காங்கே நிகழ்த்தினர்.

பொருளுண்மையைப் பற்றிக் குழப்பம் ஏற்படுமபோதெல்லாம் பெரியோர் தோன்றுதல் மரபு அம்மரபுப்படி தான் தோன்றினுர் ஒரு பெரியார். அவரே மெய்கண்டார்.

சமயக்கருத்துக்கள் பலவாகி கிளைச்சமயங்கள் பல தோன்றின, சமயப்பூசல்கள் தொடங்கின. மக்கள் வேத சிவாகமங்களின் உண்மைப் பொருளை உணர முடியாமல் அலமந்தனர். அன்றைய நிலையிலேதான் நான் பேச்சுக்கு எடுத்துக்கொண்ட பொய்கண்டகன்ற புனிதமெனும் அத்துவித மெய் கண்டநாதன் தோன்றினுர்.

சிவபக்தி, அடியார் பக்தி முதலிய பக்திகளில் சிறந்த கடந்தை நகரிலுள்ள சைவ வேளாளப் பெற்றோருக்குப் பிறந்தார். இவரது அபிகானம் அச்சுதகழப்பாளர் இவர்களுக்கு நெடுங்காலமாகப் புத்திரபாக்கியமின்மையால் தங்கள் குலகுருவாகிய சகலாகம பண்டிதரை அடைந்து முறையிட்டனர். அவர் தேவாரத் திருமுறையிலே கயிறுசாத்த திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய [illegible] [illegible] முதயமாக அப்பாசுரத்தை வாசித்துக்காட்டி திருவெண்ணாட்டுக்குப்போய் சுவேதவனப் பெருமானை வணங்கித் தவமிருக்குமபடி மாணுக்கனுக்கு அருள்புரிந்தார்.

பொழுதெல்லாம் அன்னர் அதற்கிடங் கொடுக்கவில்லை. இதற்கு நியாயம் இருந்தது. அன்புப் பணி செய்து நிற்றலை அவர் விருமபினுர். வைத்தியத்தில் உள்ள ஆற்றலையும் அநுபவத்தையும தேசத்திற்கே அர்ப்பணஞ் செய்து ஏழை மக்களின் தோழனுகிவிளங்கியது மன்றி மருத்துவ சேவையிற் பெருக்கிய செல்வத்தை மக்களுக்கே பல வேறு வகைகளில் உரித்தாக்கும் நோக்கங் கொண்டனர் என்க.

சைவமக்கள் சைவச் சூழலில் வளர்ந்து வர வேண்டுமென்ற எண்ணங் கொண்ட இப் பெரியார் கல்விக் கழகங்களை விருத்தி செய்வதிலே கண்ணுங் கருத்துமாக இருந்தனர். கந்தவரோதயக் கல்லூரி இந்து வித்தியா விருத்திச் சங்கப் பாடசாலைகள இன்னும் பல பள்ளிக்கூடங்கள் இவ் வள்ளலின் ஆதரவை என்றும் பெற்றோங்கி வந்தன. சைவ சபைகள் மன்றங்கள் விழாக்கள் பொதுநல வைபவங்கள் வைததியசாலைகள் யாவும் வைத்திய கலாநிதியின் நன்கொடையை அநுபவித்தன தமிழகத் தலை நகரில் ஒரு பூங்கா அமைப்பதற்குதவிய தலைவரும இவரே.

மதிப்புக்குரிய வைத்திய கலாநிதி மருத்துவக் கல்வி மட்டும் பயின்று அதிற் பாண்டித்தியம் அடைந்ததோடு அமையவில்லை. தத்துவ சாத்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டு அருங்கலை நூல்கள் பல ஆராய்ந்துணர்ந்தனர். ஆழ்ந்த சயய ஒழுக்கப்பண்புடையவர் ஆகையால் சொற்பெருக்காற்றுவதை விருமபாது செயலாற்றுவதையே நற்றெண்டாகக்கருதி வாழ்ந்தனர். இவ்வுத்தமர் இந்நாட்டு மக்களுககெல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக இருந்தார். வாழ்க அவர் தூய நாமம்.

## வள்வல் மறைந்தார்



வள்ளல்களுள் வள்ளலாக மருத்துவர்களுள் மருத்துவ மாணிக்கமாக வாழ்ந்து இறந்தும் இறவாப் புகழ் எய்திய வைத்திய கலாநிதி திரு. சு. சுப்பிரமணியம் அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவிக்கின்றேம்.

அச்சுதகளப்பாளர் மனைவியொடு பெண்ணாகடத்தை அடைந்து தவமிருந்து புண்ணியங்களிற் சிறந்த புண்ணியமாகிய சிவபூசை, அடியார் பூசையை மிகுந்த வினயத்துடன் புரிந்து தள்ளவேண்டிய அழுக்காறு, அவா, வெகுளி இன்னுச்சொல் நான்கையும் தள்ளிக் கொள்ளவேண்டிய,

ஒழுக்கம் அன்பருள் ஆசாரம்
உபசாரம் உறவு சீலம்
வழுகிலாததவம தானங்கள்
வந்தித்தல் வணக்கல் வாய்மை
அழுகிலாத் துறவடக்கம்
அறிவொடர்ச் சித்தவாகி
இழுகிலா அறங்களானல்
இரங்குவன் பணியறங்கள்.

அன்பர்களே! ஒழுக்கம் முதலிய பதினுறும் மற்றுமவைபோல்வனவுமாகிய நன்மைகள் ஒருவனுக்குளவாயின் இரங்குவானது பணியாகிய அம்முயற்சி அறமாய் முடியும். இங்கே சொன்ன ஒழுக்கமுடையவராய், பெருப்புண்ணியத்தைச் செய்ததினுலே இவர்கள் செய்த புண்ணியம் ஈசுவர அற்பணமாக முடிந்தன. முடிய ஓராண்டு முடிவிலே வைகறையிலே இருபத்தைந்து கருவிகளுடன் ஆன்மகணடத்தில நின்ற சொப்பன அவத்தையில் ஆன்மநாயகர் ஆகிய சிவம அருட்டிருமேனியுடன் முன்னிலையாகி அச்சுதகளப்பாழரை விளித்து 'உனக்கு ஞானசம்பந்தன்போல் ஓர் குழந்தை கிடைக்குமென றருளி தமது சொரூபத்தைத் தலைக்கூடினுர். திருவருளால் மனைவி கருப்பவதியாக அன்று தொடக்கம் வேதத்தில் கருப்பவதிகளுக்குச் சொல்லிய கிரிகைகளைத் தவருது கருப சூத்திரத்தில் சொன்ன முறைப்படி காதலோடு செய்து முடித்தார் மெய்கண்டார். பத்தாமாதம் நிலவலையத்தவதாரத்தார். அவதரித்ததின் நோக்கம்:

இந்தமுறை கிரியையெலா
மீரைந்து திங்களினு மியற்று
நாளிற்
சந்தமறை யாகமங்கள்வழியொ
முகுதாபதர்கள்சலிப்பற்றேங்க
மந்தபரிபாகரு நல்லத்துவித மெய்
யுணர்ந்து மகிழ்ச்சி யெய்த
எந்தையருள் சிவஞான போத
மறையற்றமிழினிது மேவ,
நல்வியாத முனியுரைசெய் சூத்
திரத்தின் பாடியமோர்நானகுங்
கொண்ட
சொல்வாய்மை பொருள்வாய்மை
தெளிதலுறத் தேராது சோக
முற்றேர்
எல்லாருமத்துவித சுத்தநிலையினி
தெய்தச் சோக மேயப்
பொல்லாத சமயிகளுமதிசயிப்பப்
புவனிமிசைப் போத மேற.
நலமலியுஞ் சிவனடியா ரெஞ்
ஞான்று மானந்த நண்ணி
யோங்கத்
தலமலியு மெந்நாட்டுந் தென்னுடு
தலையெனவே சகங் கொண்டா
டக்
கலைமலியும் பிள்ளையா ரொருவர்
தாந் தந்தைமகிழ கவலை தீர
நிலவலயததவதரித்தார்நிறையன்
பர் சுற்றததார் மகிழ்ச்சி நீட.

இக் குழந்தைக்கு 'சுவேதனப் பெருமாள் என்ற திருநாமம் சூட்டப்பட்டது. இக்குழந்தை பெண்ணாகடத்தில் தந்தைதாயாரில்லத்திலும், திருவெண்ணெய் நல்லூரில் நல்லமமாள் இல்லத்திலும் அருமையாக வளர்ந்து வந்தார் இக்குழந்தையின் மூன்ருவது ஆண்டிலே திருவெண்ணெய் நல்லூரிலிருக்கும் தருணத்திலே திருக்கைலாய பரம்பரையில் அகச்சந்தானனது நான்காவது குருவாகிய பரஞ்சோதி முனிவர் ஆகாயவீதியாக வந்து இக்குழந்தை பண்டை நற்றவத்தால் பெற்ற பரிபக்குவத்தையறிந்து, உபதேசம் செய்து தமது ஆசிரியராகிய சத்திய ஞான தரிசனிகளுடைய பெயரையே இக்குழந்தைக்கு தீட்சாநாமமாகச் சூட்டிச் சென்றுர் இப்பெயரே 'மெய்கணடார்' இவ்வாறு உபதேசம் பெற்ற மெய்கண்டார் பொல்லாப் பிள்ளையார் சந்நிதியிலே நிட்டை செய்து, நிட்டையிலேயே அவரது வாயிலாகச் சிவஞானபோதம் வந்தது. சிவஞான போதத்தின் வழியே சிவஞானசித்தி, சிவப்பிரகாசம் முதலிய நூல்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம் 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை

Std. 1- சிறுப்பர்.


இவ்வாரம் 19-1-64 — 25-1-64

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

பழைய முதலீட்டினுல் சில இலாபம். அன்கியர் அயலவர் உதவி, எதிர்ப்பால் நண்பர் உதவி அதிக செலவு தந்தையார்க்குச் சுகவீனம் என்பன உண்டாம.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

தந்தைவழி உறவினர் வசைபரப்புவோர் தொல்லை, பணநன்மை, புது முறற்சிகள் தாமதித்து வெற்றிபெறல் உண்டாம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

உடல்நிலை கவனம். விரும்பத்தகாத கண்டனங்களைச் சந்தித்தல், பணமளவில் ஓரளவு நன்மை, நண்பர் இடரிலிருந்து விடுவித்தல் என்பன உண்டாம்.

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

குடும்பத் தகராறு, சுகவீனம் நிச்சயம்! பணலாபம் புதுமுயற்சிகளில் ஓரளவு வெற்றி, எதிரிகளுக்கு இடையூடு ஆதியன ஏற்படும்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

தடைகளைத் தாண்டுவீர். எதிரிகளுக்கு இடையூறு, குடும்பத தொல்லை, சிறு சுகவீனங்கள் உண்டாம். ஞாயிறுமாலை, திங்கள் செவ்வாய் எச்சரிக்கை,

**கன்னிராசி** உததரம் 2, 3 4ப பாதம் அத்தம் சிததிரை 1, 2ப பாதம்.

நிம்மதியீனம், சுகவீனம், பண நன்மை, அந்நியர் அயலவர் உதவி உண்டாம. செவ்வாய் காலை புதன் வியாழன் எச்சரிக்கையாகக கழியவேண்டும்.

**துலாம்,** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

இனத்தவருடன் மோதலும், வாகனங்களாற் செலவும், உணர்ச்சிமோதல்களும் உண்டாம், இரகசிய எதிரிகள் பற்றியும், இறுதி நாளும் எச்சரிக்கை.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

பணநன்மை, நிலபுல வருவாய் உண்டாம் மன நிம்மதியிருக்காது.

**தனுராசி** மூலம், பூராடம் உததராடம் 1ம் பாதம்.

சண்டைக்கு முந்துதல் பெருஞ்செலவு, நண்பர் தம்பி தங்கையர் உதவியாதியன உண்டாம்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம பாதம் திருவோணம் அவிட்டம 1, 2ம் பாதம்.

சொந்தப் பிரச்சினைகள் தொடரும் உடல்நிலை ஊறுபடும், பணநன்மை எதிரிகளுககு இடையூறு என்பன உண்டாம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

செலவுகள் பெருகும் போதிய வருவாயிருக்காது, நோய்க்கிடக்கிடமுண்டு வயிற்றுக் கோளாறுண்டாம்,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாத ரேவதி.

நண்பர் மிக உதவுவர், நிலபுல வருவாயும் தாயாருக்கு சுகவீனமும் உண்டாம்.

## நானிலம் போற்றும் நால் வேதம்

''வேதங்கள் என்பவை இந்தியாவுக்கு மட்டும் பெருமையையும பயனையுந் தருவனவல்ல. மனித இனமே பயன் பெறும் கருவூலங்கள் ஆகும். ஏனெனில் இவ்வேதங்கள் மனிதன் உலக பந்தங்களிலிருந்தும் விடுபட்டு உயர்நிலையடைவதற்குப் போராடுவதைக் காட்டுகின்றன'' இவ்வாறு மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த பேராசிரியர் பவுல் தேமி என்பார் அண்மையில் நிகழ்ந்த கீழைத்தேச இலக்கிய மாநாட்டில் குறிப்பிட்டார்.

## ஜிந்துப்பிட்டியில் சமயப்பிரசாரம்

—0—

கொழும்பு ஜிந்துப்பிட்டி என்னும் ஜெயந்தி நகர் ஸ்ரீ. சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஞாயிற்றுக்கிழமை தோறும் மாலை 6 மணி முதல ஒலி பெருக்கிக் கருவிகளுடன் நடைபெற்று வருகின்ற கூட்டுப் பிரார்த்தனையின் 1964-ம் ஆடு ஜனவரி மாதத்திய நிகழ்ச்சிகளில் 19-1-64 ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிமுதல் இரவு 8 மணி வரை திரு. க. சச்சிதானந்தன் அவர்கள் "ஆறுபடை வீடு" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். 26-1-64 ஞாயிற்றுக்கிழமை மாலை திருமு சோமசுந்தரம் அவர்கள் "விவேகானந்தர்" என்னும் பொருள் பற்றி ஓர் ஆராய்ச்சிச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்,

### கோட்டு விற்பனவு விளம்பரம்

மட்டுவில் வடக்கு
கதிர்காமர் அருணசலம்
—வழக்காளி

இல. 2557

எதிராக

மட்டுவில் வடக்கு
1. சபாபதி பொன்னையா
2 பெண் வளளிப்பிள்ளை
—எதிராளிகள்,

சாவகச்சேரி டிஸ்திறிக கோட்டில் 2557-ம் இலகக வழககில் எனக்குக் கிடைதத கோட்டுக கட்டளைப்படி, பின்னல் விபரிககப்படும் ஐந்து துண்டுககாணிகள் 1964-ம்ஆண்டு பெப்ரவரி (மாசி) மாதம் 3-ம திகதி (3-2-64, திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று பிரசிதத ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 2800-ம், இதில் ரூபாய் 2000-க்கு 4-12-62திகதி தொடககம் 29-4-63 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும், பின் திகதிதொடககம் முழுததொகைக்கும் இறுபடும்வரைககும் 100 க்கு 5வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபாய் 195-95 சதம். இதில் ரூபா 150 இறுபட்டது.

காணிகளின் விபரம்:

1, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச் சேரிக்கோவிற்பற்று மட்டுவில் வடக்கிறை "பொற்கலம்பிட்டி வளவு" நிலப்பரப்பு 13-ம், மேலும் நிலப்பரப்பு 2-ம், மேலும் நிலப்பரப்பு 4-ம் சேர்ந்த மொத்தம் நிலப்பரப்பு (19). இதில் தெற்குப் பககமாக அரைவாசிக்கு நிலப்பரப்பு ($9\frac{1}{2}$-ம்). எல்லை கிழக்கு சரவணமுதது மடண் பவானியின் ஆதனம், வடககு கந்தையா பெண் சின்னப்பிள்ளையின் ஆதனமும், இக்காணிக்குரிய ஒழுங்கை முகப்பும், மேற்கு கணபதிப்பிள்ளை பெண் மாணிக்கத்தின் ஆதனம், தெற்கு கந்தையா முத்துக்குமாருவின ஆதனம், இக்காணிக்குட்பட்ட தென்னைகளும், மற்றும் பயிர்களும் வீடுகளும் கிணறும் இன்னும் வடக்கெல்லைககாணியின் மேற்குப்பக்கமாக இக்காணிக்குப் பாவிக்கும் ஒழுங்கை உரித்தும் இதடக்கலும். முற்பதிவு F 198/50.

2, மேற்படி மட்டுவில் வடக்கிறை "கறடிகுளிப்புலம்" நிலப்பரப்பு $9\frac{3}{4}$. இதில் கிழக்குப்பககமாக நிலப்பரப்பு 4 7/8 இதில் தெற்குப்பக்கமாக நிலப்பரப்பு 1 7/8-ம். இந்த நிலப்பரப்பு 1 7/8-க்கு எல்லை கிழககு வேலாயுதர் அருணசலத்தின் ஆதனம், வடக்கு சரவணமுதது கணபதிப்பிள்ளையின் ஆதனம், மேற்கு செல்லததுரை பெண் சின்னம்மாவின் ஆதனம், தெற்கு ஒழுங்கை முகப்பும வயித்திலிங்கம் இராசையாவுக்கும் சகோதரர்களுக்குமுரிய ஆதனம். இதடக்கலும், இன்னும் வடக்கெல்லைக் காணிககுள் இருககும் கிணற்றில் தண்ணீரப்பக்கும். முற்பதிவு F 155/199.

3, மேற்படி சரசாலையிறை "இல்வாறை வயல்" நெற்பரப்பு 2 7/8-ம், ஆனல் உறுதிப்படி நெற்பரப்பு $3\frac{1}{4}$-ம். எல்லை கிழககு வேலுப்பிள்ளை கந்தையாவுகதும் சகோதரனுககுமுரிய ஆதனம், வடக்கு நடைவரம்பு, மேற்கு கார்த்திகேசு தம்பிப்பிள்ளையின் ஆதலம், தெற்கு கந்தர் கணபதிப்பிளளையின் ஆதனம், இதடங்கலும். முற்பதிவு F 155/200.

4, மேற்படி சரசாலையிறை "கொட்டைஓடுமட்டுவயல்" நெற்பரப்பு $2\frac{1}{2}$-ம எல்லை கிழக்கு கந்தர் கணபதிப்பிள்ளையின் ஆதனம் வடக்கு கார்த்திகேசு தம்பிப்பிள்ளையின் ஆதனம், மேற்கு கீழ குறிககப்படும் 5-ம் ஆதனம். தெற்கு கந்தர் கணபதிப்பிள்ளைககும் மறுபேருககுமுரிய ஆதனம். இதடங்கலும். முற்பதிவு F 155/201.

5, மேற்படி சரசாலையிறை "இல்வாறைவயல்" நெற்பரப்பு $2\frac{3}{4}$-ம். எல்லை கிழக்கு மேலே குறிக்கப்பட்டிருக்கும் 4-ம் ஆதனம், வடக்கு கார்த்திகேசு தம்பிள்ளையின் ஆதனம், மேற்கு கந்தர் கணபதிப்பிள்ளையின் ஆதனம, தெற்கு சரவணமுத்து வல்லிபுரத்தின் ஆதனம். இதில் சொரியலாய் மூனறில இரண்டு பங்கு (2/3) பங்கு. முற்பதிவு F 198/54.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer & Licensed Auctioneer.
தெல்லிப்பழை, 27-12-1963.
M 266 17-1-64


உத்தரவாதம்! உயரிய வேலை! நீடிய உழைப்பு!
சிறந்த அழகு! இவைகள் அனைத்தும் அமையப்பெற்ற

**பவுண், வைர ஆபரணங்களுக்கு**

சிறந்த இடம்:

# எல். கே. எஸ்.

## "தங்க மாளிகை"

கன்னதிட்டி, :: யாழ்ப்பாணம்.

போன் : 281. தந்தி : ஜுவல்லர்ஸ்.


### உடுவில் கற்பகப் பிள்ளையார் கோவிலுக்கு மண்டபம்

நாளை (18-1-64) நண்பகல் மேற்படி கோவிலில் மண்டபம் அமைப்பதற்கு வண்ணைக் கொடைவள்ளல் திரு. சு. கனகசபை சிறுப்பர் அவர்கள் முதற் கல்லை நாட்டுவர். அதைத் தொடர்ந்து பொதுமக்கள் அளிககும நிதியுதவியைக் கொண்டு மண்டப வேலை தொடர்ந்து நடைபெறும்.

### கோட்டு விற்பனவு விளம்பரம

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

இல M B 4805

யாழ்ப்பாணம் கந்தர்மடம்
1 இளையதம்பிசங்கரநமசிவாயமும்
2. பெண் இராசபூபதியும்.
-வழக்காளிகள்.

எதிராக

யாழ்ப்பாணம் ஸ்டான்லி ரோட்டு
சிதம்பரப்பிள்ளை சிவரத்தினம்
-எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 4805 ம் இலகக வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1964-ம் ஆணடு பங்குனி மாதம் 14ம் திகதி(14-3-64)சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 3887 இன்னும் ரூபா 3000 தகற்கு 14-5-62 தொடக்கம் 31-1-63 வரைக்கும் 100க்கு 10 வீத வட்டியும் பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும்வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 263 சதம் 35. இதில் ரூபா 2000 கொடுபட்டது.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கிறை 'ஊமை வயல் பிள்ளைப்புலமும் தலைமேடையும்' பர நெல். இலா $2\frac{1}{2}$. வீடும் கட்டிடங்களும் கடையும், வான்பயிர் செய்பயிர்களும் கிழக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புருத்தும். எல்லை கிழக்கு P. ஞானசேகரம் பெண் மங்கையற்கரசியினுதனம். வடக்கு ரோட்டு. மேற்கு கந்தையா மகள் சிவஞானத்திருமைக்காரரினுதனம். தெற்கு செல்லப்பா கைம்பெண் செல்லம்மாவினுதனம். முற்பதிவு D 204/264. D 273/25.

தா. செல்லையா,
கொமிஷனரும்நிலைமதிப்பாளரும்
நம்: 37. கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
13-1-64.
M. 263 17-1-64

## சித்தர்கள் கண்ட...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் தோன்றின. இந் நூல்களால் குழப்பங்களெல்லாம் இரிந்தோடின முப்பொருள் உண்மையும், அத்துவித உண்மையும், வேத வேதாந்தத்தின் உள்ளமும், வேதாந்த சூத்திரத்தின் உள்ளமும் மக்களுக்கு நேரிய முறையில் புலனுயின.

மெய்கண்டார் ஒரு தமிழர் அவர் குருநாதன் வாயிலாகப் பெற்ற சிவஞானபோத உபதேசம் அவர் வழியாகத் தமிழ்ச் சிவஞான போத நூலாகத் திரண்டது. சுருங்கச் சொல்லி விளங்கவைப்பது தமிழுக்குரிய சிறப்பியல்பு. சிவஞானபோதம் மிகச் சுருங்கிய நூல். பன்னிரண்டு சிறு, சிறு சூத்திரங்களால் ஆக்கப்பட்ட சிறு நூல். பெரிய உலகையும் எண்ணிறந்த ஆன்மாக்களையும், எல்லையற்ற கடவுளையும் காட்டுதல் வியப்பன்றே. சிவஞானபோதம் சுருங்கிய சொல்லும் பெருகிய பொருளும் உடையது. சிவஞான போதச்சொல் ஆலின் விதை போன்றது; அதன் பொருள் மரம் போன்றது. இதன் பெருமையை ஒரு பெரியார்,

"சிறியவாடியிற் பெரியமால்
வரைப் பொருள் செறிந்தாங்
கறிவுநூல்களின்முடி பெலமகத்
தடககியதோர்
நெறியினீட்டி நிகழ்ச்சிவ ஞான
போதத்தைத்
குறியதீந் தமிழாலுரை
குரவனைப் பணிவாம்"
வேதம் பசுவதன்பால்
மெய்யாகமம் நால்வர்
ஓதும் தமிழ் அதன்
உள்ளுவ நெய் — போதமிகு
நெய்யின் னுறு சுவையாம்
நீள் வெண்ணை மெய்கண்டான்
செய்த தமிழ் நூலின் 'திறம்',

— தொடரும்.

## வரவேற்பு விழா

யாழ். மாநகரசபை 6-ம் 7ம் வட்டார அங்கத்தவர்களுக்கும், மாநகரமுதல்வர் உதவி முதல்வர் ஆகியோருக்கும் வரவேற்பு விழா ஒன்றினை வைப்பதற்கு நாயன்மார்கட்டு கிராமமுன்னேற்றச்சங்கம் தீர்மானித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

## திருவாசகத்திலே

(1- ம் பக்கத்தொடர்ச்சி)

பொழுது அவர் மேற்படி சபை விழாக்களைக் கொண்டாடும் நோக்கங்களைக் கூறி, தாய் நாட்டினதும் சேய் நாட்டினதும் தொடர்பு எந்நிலையில் உள்ளது என்பதையும் காட்டினார். திருவாசகத்தில் திருவண்டப்பகுதி, திருவெம்பாவை முதலியன எவ்வாறு சிறப்புடையன என்றும் விளக்கினார்.

பண்டிதர் இ. நமசிவாயம் அவர்கள் "அறம்" என்னும் பொருளில் பேசும்பொழுது அறம், மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றாலும் செய்யப்படும், நாவலரின் நூல்கள் எவ்வளவு சிறப்புடையன. அவர் எழுதிய பாலபாடங்களும், சைவ வினாவிடைகளும் மாணவருலகத்திற்குப் பெரும் பயனுள்ளதாக விளங்குகின்றன என்றார்.

பின்னர் பண்டிதர் வித்துவான் திரு. இ. திருநாவுக்கரசு அவர்கள் "பெரிய புராணம்" என்னும் தலைப்பில் விரிவுரை நிகழ்த்தும்பொழுது சைவமரபிற்கு வழிகாட்டியாகப் பெரிய புராணம் அமைந்துள்ளது. திருவைந்தெழுத்தின் உண்மையைச் சொல்லவும், சிவனடியார் பெருமைகளைக் கூறவும் பெரிய புராணம் தோன்றிற்று. இது முத்தி சாதனத்திற்கு வழிகாட்டும் நூல், பன்னிரண்டாவது திருமுறையாக இது வைக்கப்பட்டுள்ளது.

திருநாவுக்கரசர் சமணர்களால் இடுக்கண் விளைவிக்கப்பட்ட தம் உடம்பிற்குச் சூலக் குறியும் இடபக் குறியும் இடும்படி திருத்தூங்கானை மாடத்து இறைவனுக்குப் "பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்" என்று விண்ணப்பிக்கின்றார்.

மேலும் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசுநாயனாரும் சந்தித்தது அருட் கடலும் அன்புக்கடலும் சந்தித்ததைப் போன்று இருந்தது. நாவுக்கரசர் சரியையில் நின்றும், திருஞானசம்பந்தர் கிரியா மார்க்கமாகவும், சுந்தரர் யோக மார்க்கமாகவும், மணிவாசகர் ஞானமார்க்கமாகவும் இறைவனடி சேர்ந்தனர் என்று வகுத்துள்ளனர். மணிவாசகருடைய காலத்தைப் பற்றிய ஐயப்பாடுகள் இன்னமும் நீங்கவில்லை. மற்ற அடியவர்களை எல்லாம் பாடிய சேக்கிழார் ஏன் பெரியபுராணத்தில் மணிவாசகரைப் பாடவில்லை? மாணிக்கவாசகருடைய காலம் இவர்களுக்கெல்லாம் முற்பட்டது என்பது திருநாவுக்கரசுநாயனார் பாடிய "நரியைப் பரிசெய்வானும்" என்னும் அடியால் விளங்குகின்றது. மணிவாசகர் ஞானத்தால் சிவமாகி விட்டபடியால் அவருடைய சரிதத்தைச் சேக்கிழார்பாடாமல் விட்டிருக்கலாம் என்றார்.

பின்னர் தேவார உபந்நியாச புராணபடனப் போட்டிகளிலும், இந்துசாதனம் நடாத்திய நாவலர்கட்டுரைப்போட்டியிலும் வெற்றிபெற்றோருக்குப் பரிசில்கள் வழங்கப் பெற்றன. பின்னர் தீர்மானங்கள் நிறைவேறின. அடுத்து நன்றியுரையுடன் மகாநாடு இனிது நிறைவேறியது.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

---

உமாபதிசிவாச்சாரியார் அருளிச்செய்த

# கொடிக்கவி

[ சைவப்புலவர் திரு இ. செல்லத்துரை அவர்கள் [

(முற்றொடர் — 3)

அன்றளவி உள்ளொளியோ டாவி யிடையடங்கி
இன்றளவும் நின்ற திருள்.

—திரு அரு. ப — அதி: 3. செய்: 3

[I "சூரிய ஒளிமுன் இருள்போல இறைவன் முன்னிலையில் நன்மையில்லாத பிரபஞ்சம் விளங்கி நில்லாது. எனவே தன்னுள் வியாப்பியமான பசு பாசங்களோடு வேற்றுமையின்றி உடனாய் நிற்றலையுடைய முதல்வனுக்குச் சுட்டியறியக்கிடப்பதொன்று இல்லையாதலால், அத்தன்மையனாகிய இறைவன் அசத்தை அறியலுறுவானாயின் (அறிந்தாங்கு அறிவனன்றி) நம்மனோர் போல வேறாகச் சுட்டி அறிவானல்லன்"]

[II "ஆணவமானது உயிர்க்கு உயிராய் நின்று அறிவை விளக்கும் (திருவருளையுடைய) சிவத்தைச் சாராமல், அவ்வுயிர் என்று உளதோ அன்றே (அநாதியே) அதனைமாத்திரம் பொருந்தி இன்றுவரையும் நிற்கின்றது.

4. "உயிர்க்கு உள் உயிராய்த் தெளிக்கும் அறிவு திகழ்ந்து உளது; (அங்ஙனம் திகழ்ந்து உளதேனும் உயிர்) திரிமலத்தே குளிக்கும்":-

இறைவனது ஞானமாகிய சத்தி அவனைப்போல யாண்டும் வியாபித்துள்ளது. ஆகவே, அது உயிருக்கு உள்ளே நின்று அவ்வுயிரை இயக்குதற்கும் உதவுகின்றது. அது, ஆன்மா பாசத்தாற் பிணிக்கப்பட்ட நிலையில் தன் தகுதியில் சற்றே குறைந்ததாய், திரோதான சத்தி என்னும் பெயரதாய் ஆன்மாவினிடத்தே இச்சை ஞானம், கிரியை என்னும் சக்திகளாய் விரிந்து, ஆன்மாவுக்கு அறியாமையைத்தரும் ஆணவத்துக்கு வலிமையை மிகுவித்த, நன்கு மறைத்தலைச் செய்து அசுத்தமாயை சுத்தமாயைகளில் தனுகரண புவன போகங்களைத் தோற்றுவித்து, அவைகளோடு ஆன்மாவைச் சேர்த்து, இருவினைப்பயன்களை அனுபவித்துப் பின் இருவினைகளிலும் ஒப்ப உவர்ப்பு (இருவினை ஒப்பு) நிகழ்வித்து அதனால் மலபரிபாகத்தை வருவித்து சரியை, கிரியை, யோகம் என்னும் சிவபுண்ணியங்களை இயற்றுவித்து அவற்றால் மந்ததரம் மந்தம் தீவிரம் ஆகிய சத்திநிபாதங்களைப் பொருந்துவித்து 'விடிவாம் அளவும் விளக்குப்போல' (திருவருட்சத்தி குருவடிவாய் வந்து தீவிரதர சத்திநிபாதத்தை ஆக்கிச் சிவஞானத்தால் முத்தியின்பம் தருவரை; சற்றே உயிருக்கு விளக்கஞ் செய்து நிற்கும். இங்ஙனம் நிற்றலையே "உயிர்க்கு உள்ளுயிராய்த் தெளிக்கும் அறிவு திகழ்ந்துளது" என்றார்.

இங்ஙனம் ஞானம் வரும்வரை திரோதான சத்தி சிறிது உபகாரம் செய்து நிற்குமாயினும் அதனால் பரமுத்திக்கு ஏதுவாகிய தீவிரதர சத்திநிபாதம் ஆன்மாவுக்குக் கைகூடாது, அதற்குத் திருவருட்சத்தியே குருவடிவாய் வந்து சிவஞானந்தந்து துணைபுரிய வேண்டும் திருவருட்சத்தி குருவடிவாய் வந்து தீக்கை செய்யாதொழியுமிடத்துப் பரிபூரணமாய் ஆணவ மயக்கந்தீராதிருக்குமாதலின் அம்மயக்கங்காரணமாக உயிர் மேலுந்தாழ்நிலையடைந்து மும்மலங்களிலும் அழுந்தும் என்பார், "தெளிக்கும் அறிவு திகழ்ந்துளதேனும திரிமலத்தே (உயிர்) குளிக்கும்" என்றார். இவ்வுண்மையைத் திருவுந்தியார் மேல்வருமாறு தெளிவுபடுத்துகிறது.

"கிடந்த கிளவியைக் கிள்ளி எழுப்பி
உடந்தை யுடனே நின்றுந் தீபற
உன்னையே கண்ட தென்றுந் தீபற".

—செய்: 14.

[அநாதியாக உன்னிடத்தில் உனக்கு உயிராய்ப் பொருந்தியிருக்கும் திரோதான சத்தியை இறைவன் ஞானசாரியனாக வந்து அதிட்டித்து நின்று எழுப்புவதனால் உளதாகும் அத்திருவருட் சத்தியோடு நீ கூடிநின்று உனது தீமையினின்றும் நீ நீங்குவாயாக; மேலும் அத்திருவருட்சத்தி, நீ பக்குவமடைந்த காலத்துத் தானே வலியவந்து உன்னைக்கண்டது என்றும் உனது தீமையினின்றும் நீங்கி உய்திபெறுவாயாக.]

---

**மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு தானஞ் செய்வாரிற் றலை.**

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கோப்பாய் தெற்கு சின்னத்துரை தியாகலிங்கம் —வழக்காளி.

எதிராக

இல. M B 4239

மாவிட்டபுரம் வேலுப்பிள்ளை கந்தையா —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 4239ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1964ம் ஆண்டு பெப்ரவரி (மாசி) மாதம் 12ம்திகதி (12-2-64) புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 4200ம், இதில் ரூபா 3000 க்கு 3-9-61 திகதி தொடக்கம் 15-2-62 திகதிவரைக்கும் 100க்கு 10 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபா 212-83 சதம். இதில் ரூபா 150 இறுபட்டது.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று மாவிட்டபுரமிறை 'கப்பிலாப்புலமும் சாயுடையும்" நிலப் பரப்பு (40ம்) குளி 6ம் பயிர்களும் கிணறும் வீடும் எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு சின்னத்தம்பி மகாதேவாவுக்கும் மறுபேருக்கும் அப்புக்குட்டி குழந்தைவேலுவுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு சிற்றம்பலம் நரசிங்கத்திற்கும் கனகராயரின் உருமைக்காறருக்குமுரிய ஆதனங்கள். தெற்கு வேலு அம்பலத்திற்கும் மறுபேருக்கும் சங்கரப்பிள்ளை அப்புக்குட்டிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
Commissioner & Valuer,
Licensed Auctioneer.
தெல்லிப்பழை. 21-12-1963.
M. 261 17-1-64

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—O—

காங்கேசந்துறை சவரிமுத்து விசுவாசம் —வழக்காளி

வழக்கு இல. M,B. 5194

எதிராக

காங்கேசந்துறை நாகன் தப்பு (தானாகவும் தன்னுடைய மனைவி பவளத்தின் ஆதனத்துக்குச் சட்டப்படியும் பிரதிநிதி) —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 5194-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி. பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1964-ம் வருடம் மாசிமாதம் 17-ந் திகதி (17-2-64) திங்கட்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 1590-ம், 16-8-62 தொடக்கம் 6-5-63 வரைக்கும் ரூபா 1000-க்கும் 12 வீத வட்டியும், அதன் பின் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் முழுத் தீர்வைத் தொகைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 242-87½ சதமும்.

காணி விபரம்:

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி, தெல்லிப்பளைக் கோயிற்பற்று, பளை இறை, "புதியாததை வளவு" நிலப்பரப்பு 4 குளி 6. இதில் வடமேற்குப்பக்கமாக நிந்தமாக நிலப்பரப்பு 1 குளி 2, கல் வீடும், தெற்கெல்லையிலுள்ள கிணற்றில் பங்கும். எல்லை கிழக்கும் தெற்கும் தப்பு செல்லத்துரையின் ஆதனம், வடக்கு காத்தி பெண் அருமையின் ஆதனம். மேற்கு புகையிரத றோட்டு.

செ. பாண்டித்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer
11/ஐ, மேல்மாடி,
மொம்சாக் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்,
11-1-64,
M. 265 17-1-64.

---

## பிழை திருத்தம்

—0—

சோபகிருது வருட திருக்கணித பஞ்சாங்கத்தில் 72, 73-ம் பக்கங்களில் அக்ஷராரம்பம் வித்தியாரம்பம், சௌள உபநயனம் ஆகிய இரு முகூர்த்தங்களிலும் தை மீ 20உ ஞாயிறு காலை நாடி 2-5, 7.24 — 8,36 என இருப்பதை, தை 20 ஞாயிறு காலை நாடி 8-10, 9.48—10,36 எனத் திருத்திக்கொள்வதுடன் தைமீ 21உ திங்கள் குறிக்கப்பட்ட முகூர்த்தத்தைத் தவிர்த்துக் கொள்க,

சி. சுப்பிரமணிய ஐயர்,
மட்டுவில்.
M 264 17-1-64

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்
இல. M,B 4308
சிறுப்பிட்டி வேலுப்பிள்ளை கனகசபை —வழக்காளி

எதிராக

சிறுப்பிட்டி தெற்கு
1, மயில்வாகனம் பத்மநாதன்
2. மயில்வாகனம் சதாசிவம்
3. மனைவி நகுலேஸ்வரி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4308-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஐந்து துண்டுக்காணியும் 1964-ம் ஆண்டு மாசிமாதம் 8-ம் திகதி (8-2-64) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

ஆதனடாப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு புத்தூர்க் கோயிற்பற்று சிறுப்பிட்டி இறை "கூளப்பறுகும் கூளக்கலட்டி" என்னும் காணி 31¾ பரப்பு. எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு பூதத்தம்பியின் உரித்தாளரின் ஆதனமும், மேற்கு பொன்னுச்சாமி மயில்வாகனத்தின் உரித்தாளரின் ஆதனமும், பொன்னுச்சாமி வயித்திலிங்கத்தின் ஆதனமும், தெற்கு வயித்திலிங்கம் பொன்னுச்சாமியின் உரித்தாளரின் ஆதனமும் இதில் பிரிக்கப்படாத அரைவாசி.

2. மேற்கூறிய கோயிற்பற்றும், இறையும் "கூளப்பறுகு கலட்டி" இருப்பு என்னும் காணி 8 பரப்பு. எல்லை கிழக்கு தம்பிப்பிள்ளையின் உரிமைக்காரர், வடக்கும் மேற்கும் பொன்னையா பெண் நாகமுத்து, தெற்கு கந்தையா வயித்திலிங்கத்தின் உரிமைக்காரர், இதில் பிரிக்கப்படாத அரைவாசி

3. மேற்கூறிய கோயிற்பற்றும் இறையும "கூலாகலட்டி" என்னும் காணி 25பரப்பு. எல்லை கிழக்கு பூதத்தம்பியின் உரிமைக்காரர், வடக்கு ஆறுமுகத்தின் உரிமைக்காரரும் மற்றவர்களும், மேற்கு ஆறுமுகத்தின் உரிமைக்காரர். தெற்கு வெளி கலட்க்காணி,

4, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோப்பாய்க் கோயிற்பற்று நீர்வேலி இறை 'தாடான்திட்டி' என்னும் காணி 50 பரப்பு. எல்லை கிழக்கு இராமலிங்கம் பெண் தெய்வானைப்பிள்ளை, வடக்கும், மேற்கும், தெற்கும் மயில்வாகனம் பூதத்தம்பியும் உரித்தாளரின் ஆதனமும். இதில் பிரிக்கப்படாத அரைவாசிப் பங்கு.

5. மேற்கூறிய கோயிற்பற்றும், இறையும், "பாதனைவெளி" 107¼ பரப்பு. எல்லை கிழக்கு மகாகணபதிப்பிள்ளையார் கோயில், வடக்கு எதிராளியும் பங்காளர்களும், மேற்கு மயில்வாகனம் பூதத்தம்பியின் உரிமைக்காரர், தெற்கு ஒழுங்கை. இதில் பிரிக்கப்படாத அரைவாசிப்பங்கு.

இ. கனகரெத்தினம்,
கொமிசனரும்,விலைமதிப்பாளரும்
நம. 35, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,
9-1-64.
M 262 17-1-64

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் [illegible]
17-1-1964 வெள்ளிக்கிழமை [illegible]
ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org